சுருக்கம்

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு – கோவை 2010 – அவினாசி சாலையில் காளப்பட்டி பேரூராட்சியில் விமான நிலைய சாலை முதல் ஆர்.ஜி.புதூர் வரை சாலை மையத்தில் இரு கைகள் கொண்ட 10 மீட்டர் உயரமுள்ள தெரு மின்விளக்கு கம்பங்கள் அமைத்தல் பணியினை கோவை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள அனுமதி – மற்றும் ரூ.57.00 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (பேரூ.2) துறை

அரசாணை ( ப ) எண். **231** நாள் **10.05.2010**

(திருவள்ளுவராண்டு 2041 சித்திரை மாதம்–27ம் நாள்)

படிக்க.

1. கோவை மாவட்ட ஆட்சியர் கடித ந.க.எண்.37/2009/உ.த.செ.மா. நாள் 25–4–2010.
2. காளப்பட்டி பேரூராட்சி மன்ற தீர்மான எண்.92/30–11–2009
3. காளப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண்.1300/2009/அ நாள் 27–04 –2010.
4. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.19332/2009/உ.4 நாள் 27–04–2010.

-------

ஆணை:

கோவை மாவட்ட ஆட்சியர், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், அவினாசி சாலையில் உள்ள விமான நிலைய சாலை முதல் நீலாம்பூர் புறவழிச்சாலை வரை காளப்பட்டி பேரூராட்சி, சின்னியம்பாளையம், மயிலம்பட்டி, நீலாம்பூர் ஊராட்சிப் பகுதிகளில் மாநகராட்சி மூலம் விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதன் அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவு தொகை விவரத்தை தெரிவித்து இவற்றுள், அவினாசி சாலையில் சின்னியம்பாளையம் ஊராட்சி, நீலாம்பூர் ஊராட்சி மற்றும் மயிலம்பட்டி ஆகிய இடங்களில் 76 எண்ணிக்கையில் விளக்குகள் அமைக்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையிலிருந்து 35 இலட்சம் (Pooled Assigned Revenue) நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது என்றும், காளப்பட்டி பேரூராட்சியில் விமான நிலைய சாலை முதல் ஆர்.ஜி.புதூர் முருகன் கோவில் வரை 94 எண்ணிக்கையில் இரு கைகள் கொண்ட 10 மீட்டர் உயர டியுப்லர் போல் ( Tubular Pole) மற்றும் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு நிறுவிட கோவை மாநகராட்சியிலிருந்து ரூ.57 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் பெறப்பட்டுள்ளன என்றும், மேற்கண்ட பணிக்காக ரூ.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாநகராட்சி மூலம் பணிகளை மேற்கொள்ள உரிய ஆணைகளை பெற்றுத் தரும்படி பேரூராட்சி இயக்குநருக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

2. பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சி இயக்குநர் மின்விளக்குகள் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.57 இலட்சத்திற்கு அரசு மானியம் ஒதுக்கி தரவும், மேற்படி பணியை பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும், கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரையின் அடிப்படையிலும் மாநகராட்சி மூலம் பணியை மேற்கொள்ள உரிய ஆணை வேண்டி அரசிற்கு அனுப்பியுள்ளார்.

3. பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மேற்படி பணிகளை மேற்கொள்ள காளப்பட்டி பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாலும், கோவை மாவட்ட ஆட்சித்தலைவரின் கருத்துருவை பேரூராட்சிகளின் இயக்குநர் பரிந்துரைத்துள்ளதாலும், காளப்பட்டி பேரூராட்சியில் விமான நிலைய சாலை முதல் ஆர்.ஜி.புதூர் முருகன் கோவில் வரை 94 எண்ணிக்கையில் இரு கைகள் கொண்ட 10 மீட்டர் உயர டியுப்லர் போல் (Tubular Pole) மற்றும் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு நிறுவிட உத்தேச செலவினம் ரூ.57 இலட்சத்தினை (ரூபாய் ஐம்பத்தி ஏழு இலட்சம் மட்டும்) அரசு மான்யமாக வழங்கி ஆணையிடுகிறது. கோயம்புத்தூர் மாநகராட்சி மூலம் இந்தப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே ஒப்படைக்கப்பட்ட மானியத் தொகையினை பெற்று, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வழங்குவதற்கு அனுமதித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

“ 2217 நகர்ப்பகுதி வளர்ச்சி– 80 பொது–800 ஏனைய செலபு– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்– II மாநில திட்டம் – JJ உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டை முன்னிட்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மானியம் வழங்குதல்– 09 உதவித்தொகை –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (கு.தொ.கு.2217–80–800–JJ-0935)”

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண் 25731 / (நநி(ம)கு.வ) /2010 நாள் 1 0–5–2010–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

நிரஞ்சன்மார்டி,
அரசுச்செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை– 600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை– 600 108.
மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர்.
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
தனி அலுவலர், உலகத் தமிழ் செம்மொழி மாநாடு, சென்னை– 600 009.
செயல் அலுவலர், காளப்பட்டி பேரூராட்சி, காளப்பட்டி.
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை– 600 005
மாநில கணக்காயர், சென்னை– 600 009 / 600 018.
நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009
செயலரின் தனிச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை– 600 108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( அ.ந.2),துறை, சென்னை– 600 009
நிதி (ந.நி(ம)கு.வ.துறை) சென்னை– 600 009
இ.கோப்பு/உ.நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.